## *4*

# "குற்றம் சாட்டப்பட்ட வகையில் குற்றவாளி!"

## (1:18-25)

*முந்திய பாடத்தில், நாம் பவுலின் பின்வரும் ஆய்வுக்கருத்துக் கூற்றின்மீது கவனம் செலுத்தினோம்:*

> *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது (1:16, 17).*

*இப்படிப்பட்ட ஒரு உறுதிப்பாட்டிற்குப் பின்பு, பவுல் தேவனுடைய அன்பைப் பற்றிக் கூறுவார் என்று நாம் எதிர்பார்ப்போம். அதற்குப்பதிலாக, அவர் தேவனுடைய கோபத்தை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பினார். 18ம் வசனம், "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று கூறுகிறது. 16ம் வசனத்தில் பவுல் தேவனுடைய அன்பின் அளிப்பினுடைய உலகளாவிய இயல்பை வலியுறுத்தியிருந்தார் ("விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு"); இப்போது அவர் அந்த அளிப்புக்குரிய உலகளாவியத் தேவையை நிலைநிறுத்தத் தேவையாயிருந்தது. மேலும், பவுல், இரட்சிப்பு என்பது யூதர்கள் புறஜாதியார் ஆகிய இருவருக்குமானது என்று அறிவித்திருந்தார். இப்போது, அவர் "யூதர்கள் கிரேக்கர்கள் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்" (3:9) என்பதைத் தெளிவாக்குவார். பவுல் 1:18-32ல் புறஜாதியார்களையும், 2:1-3:8ல் யூதர்களையும், 3:9-20ல் சகல மனிதகுலத்தையும் தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்தார்.*

*இந்தப் பாடம் 1:18-25 வசனப்பகுதியை எடுத்துரைத்து முடிப்பதாக உள்ளது. இவ்வசனப்பகுதியினூடாகக் கண்ணோக்கி, "க்கு" மற்றும் "இதினிமித்தம்" என்ற தொடர்புபடுத்தும் வார்த்தைகளைத் தேடிப் பாருங்கள். சில மொழிபெயர்ப்பாளர்கள் இந்த "தொடர்புவார்த்தைகள்" யாவும் இன்றியே இவ்வசனப்பகுதி சுலபமாய்ப் படிக்கப்படக்கூடும் என்று நினைத்து, இவற்றில் சிலவற்றை விட்டுவிட்டனர் என்பது தெளிவு, ஆனால்*

*இந்தத் தொடர்பு வார்த்தை ஒவ்வொன்றும் முக்கியமானதாக உள்ளது. ஜான் R. W. ஸ்டோட் என்பவர், "[பவுல்] ஏற்படுத்தும் ஒவ்வொரு கூற்றும் அதற்கு முந்திய கூற்றுடன், 'க்கு' அல்லது 'இதினிமித்தம்' என்று அர்த்தப் படுகிற gar அல்லது dioti என்ற கிரேக்க இணைப்பு வார்த்தையினால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.[1] அப்போஸ்தலர் [பவுல்] புறஜாதியாருக்கு எதிரான தமது கருத்தைப் படிப்படியாக முறைப் படி கட்டியெழுப்பினார்.*

*1:18க்கு முன்பாகப் பின்வரும் வார்த்தைகளை இடைச்செருக முடியும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: "கேளுங்கள்! கேளுங்கள்! நீதி மன்றம் இப்போது செயல்படுகிறது!"[2] பவுல் ஒரு நீதிமன்றத்தில் தாம் இருப்பது போன்று தமது கருத்தைத் தெரிவித்தார். அவர் "க்கு" (gar) மற்றும் "இதினிமித்தம்" (dioti) என்ற வார்த்தையைப் பயன்படுத்திய ஒவ்வொரு வேளையிலும், செயல் விளைவில் எழக்கூடிய ஒரு மறுப்பிற்கு பதில் அளித்துக் கொண்டிருந்தார்.[3] பவுலின் சிந்தனை எவ்வாறு வளர்ச்சிய டைந்தது என்பதைக் காண்பதற்கு, நாம் இந்த அப்போஸ்தலருக்கும் ஒரு எதிராளிக்கும் இடையிலான பல காட்சிகளைக் கற்பனை செய்வோமாக.*

## *குற்றச்சாட்டு: பாவத்தினால் குற்றப்படுதல் (1:18அ)*

### *கற்பனை செய்யப்பட்ட சொல்லாடல்*

*எதிராளி: "மனிதர்களை நீதிமான்களாக எண்ணுவதற்கான தேவனு டைய ஏற்பாடு சுவிசேஷத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று நீர் கூறினீர். தேவன் அன்பின் தேவனாக இருப்பதாலும் அவர் எவரொருவரையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டார் என்பதாலும், இப்படிப்பட்ட ஏற்பாடு ஒன்று உண்மையில் அவசியமாகிறதா?"*

*பவுல்: "ஆம், அவசியமே, ஏனென்றால் தேவன் கோபத்தின் தேவ னாகவும் இருக்கிறார். எல்லாரும் பாவிகளாயிருக்கின்றனர், பாவம் தண்டிக் கப்பட வேண்டும் என்று தேவகோபம் வற்புறுத்துகிறது!"*

### *ஒளியூட்டும் வசனப்பகுதி*

*வசனப்பகுதியில், "மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியா யத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது" என்றுள்ளது (வசனம் 18ஆ). தேவநீதி வெளிப்படுத்தப்பட் டுள்ளது போலவே (வசனம் 17), தேவகோபமும் வெளிப்படுத்தப்பட் டுள்ளது. தேவநீதி, சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (வசனங்கள் 16, 17). தேவகோபம், வேதாகமத்தில், வரலாற்றில், மற்றும் (நாம் காணப் போகிறபடி) இன்றைய நாட்களின் வாழ்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது சுவிசேஷத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையில் சிந்தித்தல் புறம்பானதல்ல - ஏனெனில் தேவநீதி என்ற கருத்தை இரட்சிப்பின் வரலாற்றிற்குப் புறம்பாக்க இயலாது. இந்த வெளிப்படுத் துதல் "பரலோகத்தில் இருந்து" வந்துள்ளது என்ற உண்மையின்மேல்*

பவுலின் வலியுறுத்தம் உள்ளது. பாவத்தைத் தேவன் தண்டிக்க வேண்டும் என்ற போதனை பவுலின் கற்பனையல்ல; அது தேவனிடமிருந்தே வந்தது.

“மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய்” தேவகோபம் உள்ளது. “அவபக்தி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*asebeia* என்ற) வார்த்தை “தேவனுடைய நபர்த்துவத்தை ... அவமதித்தல்” என்ற கருத்தைக் கொண்டுள்ளது.[4] “அநியாயம்” (*adikia*) என்பது, “நபர்களுக்கிடையில் போன்றே, தப்பு, அல்லது தப்புசெய்தல் என்பதற்கான விரிவான சொற்றொடராகும்”[5] இவ்விரு சொற்றொடர்களும் ஒன்றிணைந்து, தேவன் அல்லது மனிதருக்கு எதிராகச் செய்யப்படுகிற பாவம் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றன. பாவத்தைப் பொறுத்தமட்டில் தேவன் செயல்படாதவராக இருப்பதில்லை. எந்தப் பாவமும் அவரது கோபத்தைத் தூண்டுகிறது.

தேவகோபத்தின் உட்பொருள் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அன்பின் தேவன் என்ற கருத்தை கோபத்தின் தேவன் என்ற கருத்துடன் ஒப்புரவாக்குதலைச் சிலர் கடினமானதாகக் காணுதல் இதற்கு ஒரு காரணமாக உள்ளது. தேவனுடைய அன்பை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு, “அன்பின் தேவன் நிச்சயமாக நம்மீது ஒருக்காலும் கோபமுள்ளவராக இருக்க முடியாது! நாம் பலவீனர்கள் என்று அவர் அறிகிறார், எனவே அவர் நமது குறைகளை சந்தேகமேயில்லாமல் கண்ணோக்காது விட்டுவிடுவார்!” என்று வாதிடுகின்றனர்.

“கோபம்” என்ற வார்த்தையைச் சிலர் மனிதருடைய கோபத்திற்குச் சமானமாக்குதல் என்பது தொடர்புடைய ஒரு பிரச்சனையாக உள்ளது. நமது கோபத்தின் வெளிப்பாடு என்பது பொதுவாகச் சின்னஞ்சிறியதாகவும் சுயநலமுள்ளதாகவும் இருக்கிறது மற்றும் இது பெரும்பாலும் பழிவாங்கும் எண்ணம் நிறைந்ததாக உள்ளது.[6] கோபத்தில் அடங்கியுள்ள அபாயங்களைக் குறித்தும் பொதுவாக அழிவை ஏற்படுத்தும் இந்த உணர்வைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வேதாகமம் எச்சரிக்கைகளைத் தருகிறது (மத்தேயு 5:22; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; யாக்கோபு 1:19, 20). இருந்தபோதிலும், வேதாகமம் “தேவகோபம்” பற்றிப் பேசவும் செய்கிறது. ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் இந்தச் சொற்றொடர் மூலம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது.

“கோபம்” என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை (*orge*) தேவனுக்கு நடைமுறைப்படுத்தப்படும்போது, “துன்மார்க்கத்திற்குத் தெய்வீக பதில்செயல்” என்பதைக் குறிக்கிறது; இது “நீதிபதி ஒருவரின் பகுதியிலான சட்டப்பூர்வமான உணர்வாக” உள்ளது.[7] டேவ் மில்லர் என்பவர் இதை “தேவனுடைய நியாயமான கோபம்” என்று குறிப்பிட்டார்.[8] லியோன் மோரிஸ் என்பவர் இந்தச் சொற்றொடரை “துன்மார்க்கமான ஒவ்வொரு விஷயத்திற்கும் எதிராக அமையப்பெற்ற தேவனுடைய பரிசுத்த இயல்பின் செயல்துடிப்பான எதிர்ப்பு” என்று விளக்கப்படுத்தினார்.[9]

தேவனுடைய பரிசுத்த இயல்பு அவர் பாவத்தைத் தண்டித்தலை

வற்புறுத்துகிறது. D. ஸ்டுவார்ட் பிரிஸ்கோ என்பவர் தேவகோபத்தை "பரிசுத்தமற்றதற்குப் பரிசுத்தமான பதில்செயல், அநீதிக்கு ஒரு நீதியான பதில்விளைவு, அசுத்தத்திற்கு ஒரு சுத்தமான புறக்கணித்தல்" என்று அழைத்தார்.[10] ஸ்டாட் என்பவர், "துன்மார்க்கத்தைத் தவிர மற்ற எதுவும் [தேவ கோபத்தை] தூண்டுவதில்லை, துன்மார்க்கம் எப்போதும் இதைச் செய்கிறது" என்று எழுதினார்.[11]

சில விளக்கவுரையாளர்கள் மனிதகுலத்தின் சுயநலமிக்க கோபத்தைப் போலிராத தேவனுடைய பரிசுத்த கோபத்தை விளக்கப்படுத்த "wrath" என்ற வார்த்தையைத் தேவனுடைய கோபத்திற்குப் பயன்படுத்தும்போது, அது முற்றிலும் நபர்த்துவம் அற்றதாயிருக்கும்படி மிகக்கடினமாக முயற்சி செய்துள்ளனர். இருப்பினும், தேவனுடைய பிரமாணங்கள், அவர் யாரா யிருக்கிறார் என்பதன் வெளிப்பாடாக உள்ளன என்பதைப் புரிந்துகொள் ளுங்கள். யாரேனும் ஒருவர் தேவனுடைய பிரமாணங்களை மீறும்போது, அவர் தேவனுக்கெதிராகவே பாவம் செய்கிறவராக இருக்கிறார். பாவம் என்பது தனிநபருக்குரியதாக உள்ளது, மற்றும் தேவனுடைய பதில் செயலும் தனிநபருக்குரியதாக உள்ளது. அது திட்டமிடாமல் செய்யப் படுவதல்ல, ஆனால் அது தனிநபருக்குரியதாக உள்ளது.

"தேவனுடைய கோபம்" என்ற சொற்றொடரை நாம் கேள்விப்படும் போது, அனேகமாக நாம் நியாயத்தீர்ப்பில் "இனிவரும் கோபாக்கினை" பற்றி நினைக்கலாம் (1 தெசலோனிக்கேயர் 1:10). அந்தக் கருத்தி லேயே "கோபம்" என்ற வார்த்தை (2:5ல் உள்ள வகையில்) ரோமருக்கு எழுதின நிருபத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அது வேறு வகைகளிலும்கூட பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, இது குடியுரிமைச் சட்டங்களை மீறுபவர்களுக்குத் தரப்படும் தண்டனையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது (13:4). 1:18ல் இதன் பயன்பாடு பற்றி, இதில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்: "... எல்லாவித அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது." NIV வேதாகமத்தில் "வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது" என்றுள்ளது. 1:18ன் "கோபம்" என்பது இறந்த காலத்திலேயோ அல்லது எதிர்காலத்திலேயோ இருப்பதில்லை, அது நிகழ்காலத்திலேயே இருக்கிறது.

தேவனுடைய நிகழ்கால கோபம், குற்றம்சாட்டும் மனச்சாட்சி (2:15ஐக் காணவும்) மற்றும் தேவனிடத்திலிருந்து பிரிந்திருத்தலின் பல்வேறு விளைவுகள் (ஏசாயா 59:1, 2; ரோமர் 9:3ஐக் காணவும்) ஆகியவற்றை உள் ளடக்குகிறது. இருப்பினும், 1:18ன் உடனடியான சந்தர்ப்பப்பொருளில், பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கும்படி கைவிடப்பட்டிருத்தலின் தெய்வீக தண்டனையையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். 1ம் அதிகாரத்தில் பவுல், "தேவன் அவர்களை ... ஒப்புக்கொடுத்தார்" என்று மூன்று முறை அறிவித்தார் (வசனங்கள் 24, 26, 28). நமது அடுத்த பாடம் அதிர்ச்சியூட்டும் அந்தச் சொற்றொடரில் மையங்கொண்டிருக்கும்.

### *வழக்காடப்பட இயலாத முடிவு*

*இந்த வேளைக்கு, நாம் பவுலினால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டின்மீது கவனம் செலுத்த விரும்புகிறோம். அவர், "மக்கள் ஒப்புக்கொண்டாலும் இல்லையென்றாலும், அவர்கள் தேவனுக்கெதிராகவும் ஒருவர் பிறருக்கு எதிராகவும் பாவம் செய்கிறபடியால், அவர்கள்மீது தேவனுடைய பரிசுத்த கோபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தண்டனைக்குப் பாத்திர ராக இருக்கின்றனர்" என்று வலிவாகக் கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.*

## *நிரூபணம்: அமிழ்த்தி வைக்கப்பட்ட தகவல் (1:18அ, 19)*

### *கற்பனை செய்யப்பட்ட சொல்லாடல்*

*எதிராளி: "தேவன் நம்மீது கோபமாக இருக்கிறார் என்பதை நீங்கள் ஏன் வலியுறுத்துகிறீர்கள்? புறஜாதியாராகிய நமக்கு யூதர்களைப்போல் எழுதப்பட்ட சட்டம்/நியாயப்பிரமாணம் ஒன்றில்லையே. நாம் எதையும் மிகச்சிறப்பான வகையில் அறிந்திராதபோது, தேவன் நம்மேல் ஏன் கோபம் கொள்ள வேண்டும்?"*

*பவுல்: "ஆனால் புறஜாதியாரான நீங்கள் மிகச்சிறப்பாக அறிந்திருந் தீர்கள். உங்களுக்கு எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் இல்லாதிருக்கலாம், ஆனால் உங்களுக்கு வெளிப்படுத்துதல் இருந்ததே. தேவன் உங்களுக்குக் கொடுத்த அறிவை நீங்கள் அமிழ்த்தி வைத்துவிட்டீர்கள். அதை சற்றும் சந்தேகப்படாதீர்கள்: உங்கள் பாவம் நிறைந்த தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகளாக இருக்கிறீர்கள்!"*

### *ஒளியூட்டும் வசனப்பகுதி*

*" மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோத மாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (1:18ஆ) என்ற கூற்றுக்கு முன்பு பவுல், "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய" (1:18அ) என்பதையும், அதற்குப்பின்பு "தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக் கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்" (1:19) என்றும் கூடுதலாகக் கூறினார்.[12] 18ம் வசனத்தில் உள்ள "சத்தியம்" என்பது "சகல சத்தியத்தையும்" (யோவான் 16:13ஐக் காணவும்) குறிப்பிடுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக தேவன் புறஜாதியாருக்குக் கையளித்த சத்தி யத்தைக் குறிப்பிடுகிறது. இதை 25ம் வசனம் "தேவனைப் பற்றிய சத்தியம்" என்று அழைக்கிறது (RSV). 21ம் வசனம், "அவர்கள் தேவனை அறிந்திருந்தனர்" என்று கூறுகையில், 32ம் வசனம் தவறு செய்கிறவர்கள் தண்டனைக்குப் பாத்திரர் என்று அவர்கள் அறிந்திருந்தனர் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது.*

*1 மற்றும் 2ம் அதிகாரங்கள் புறஜாதியாருக்குத் தேவன் தம்மையும் தமது சித்தத்தையும் வெளிப்படுத்தியிருக்கும் குறிப்பிட்ட இரு வழிமுறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன: உண்டாக்கப்பட்டிருக்கிறவைகள் (1:20) மற்றும்*

*மனச்சாட்சி (2:15). [இவற்றுடன்] புறஜாதியாருடைய உலகத்திற்குத் தேவனுடைய விசேஷித்த மற்றும் தனிப்பட்ட வகையிலான வெளிப்படுத்து தல்களையும் நாம் கூட்டிக்கொள்ள முடியும். கர்த்தர் யூதமக்களினத்தைப் பிரித்து எழுதப்பட்ட வெளிப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்ததால் (3:1, 2ஐ காணவும்), தேவன் புறஜாதியார் மீது ஆர்வமாயிருக்கவில்லை என்றும் அவர் தமது ஆவிக்குரிய "வெளிச்சத்தை" அவர்களுக்கு அருளவில்லை என்றும் நாம் நினைக்கலாம். [ஆனால்] விஷயம் இப்படி இருக்கவில்லை என்பதற்கு வேதவசனங்கள் பல குறிப்புகளைத் தருகின்றன. தேவன் யூதர்களைப் பற்றி மாத்திரமல்ல, ஆனால் முழு மனிதகுலத்தைப் பற்றியும் அக்கறை கொண்டிருந்தார் என்பதற்கு ஜேம்ஸ் பர்ட்டன் காஃப்மேன் என்பவர் பலபக்கங்கள் அளவிற்கு வேதாகமரீதியான நிரூபணம் தந்தார்.[13] [அவற்றில்] பின்வரும் ஒரு சில உதாரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

- *மெல்கிசேதேக்கு "உன்னதமான தேவனுடைய ஆசாரியராக" இருந்தார் (ஆதியாகமம் 14:18), ஆனால் அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கவில்லை.*
- *பிலேயாம் என்பவர்மீது "தேவனுடைய ஆவி வந்தது" (எண்ணாகமம் 24:2), ஆனால் அவர் இஸ்ரவேலராக இருக்கவில்லை.*
- *தேவன் யோனாவைப் புறஜாதியாரின் நகரமாகிய நினிவேக்கு அனுப்பினார் (யோனா 1:2).*
- *எலிசா புறஜாதி படைவீரனான, நாகமானைக் குணமாக் கினார் (2 இராஜாக்கள் 5).*
- *புறஜாதியாரான ஞானிகள் ஏதோ ஒரு வகையில் யூதர்களின் மேசியாவைப் பற்றி அறிந்துகொண்டனர் (மத்தேயு 2).*

*தேவன் தம்மைப் புறஜாதியாருக்கு எவ்வாறு, எப்போது, அல்லது எங்கே வெளிப்படுத்தினார், அல்லது அந்த வெளிப்படுத்துதல்கள் மிகக் குறிப்பாக என்னவாக இருந்தன என்பது பற்றி நாம் உபதேசரீதியாகச் சரியாகக் கூற இயலாது. இருப்பினும், இரு விஷயங்களை நாம் அறிய முடியும். முதலாவது, தேவனுடைய வெளிப்படுத்துதல் ஒருக்காலும் தெளி வற்றதாகவோ அல்லது உறுதியற்றதாகவோ இருந்ததில்லை; அது புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. பவுல், "தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்" (1:19) என்று கூறினார். REB வேதாகமம், "தேவனைப்பற்றி அறியக்கூடியவை யாவும் அவர்களின் கண்களுக்கு முன்பாகத் தெளிவாக இருக்கிறது" என்று கூறுகிறது. நாக்ஸ் என்பவர் மொழிபெயர்ப்புச் செய்த வேதாகமம் "தேவனே அதை அவர்களுக்குத் தெளிவாக்கினார்" என்று கூறுகிறது.*

*இரண்டாவது, புறஜாதியார் தங்களுக்குத் தேவன் வெளிப்படுத்தி யதைப் பொக்கிஷமாய்ப் பாதுகாத்துக்கொள்வதற்குப்பதிலாக, அதை அடக்கி வைத்திருந்தனர். 18ம் வசனத்தில் "அடக்கி" என்று மொழிபெயர்க்*

கப்பட்டுள்ள (*katecho* என்ற) வார்த்தை "கீழே" என்பதற்கான முன்னிடைச் சொல்லை (*kata*) "பிடித்துக்கொள்ளுதல்" என்பதற்கான (*echo* என்ற) சொல்லுடன் இணைத்துப் பெறப்பட்ட ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. *Katecho* என்பது நேர்மறைக் கருத்தில் பயன்படுத்தப்பட முடியும் (1 கொரிந்தியர் 11:2ல், "கைக்கொண்டு" என்பதைக் காணவும்), ஆனால் 1:18ல் இதன் பயன்பாடு, மல்யுத்த வீரர் ஒருவர் தமது எதிராளி தப்பிவிடாதபடி அவரை "கீழே அமுக்கி" வைப்பதுடன் ஒப்பிடப்படலாம்.[14] CEV வேதாகமம் புறஜாதியார் "சத்தியத்தை நசுக்கி[னர்]" என்று கூறுகிறது.

புறஜாதியார் யூதர்கள் அளவுக்கு ஆவிக்குரிய வெளிச்சத்தைப் பெற்றிராது இருக்கலாம், ஆனால் அவர்களுக்குக் கொஞ்சம் வெளிச்சமாவது தரப்பட்டிருந்தது. ஆனால், தேவன் அவர்களுக்கு அளித்திருந்த வெளிச்சத்தின் பெரும்பான்மையான பகுதியை, அவர்கள் அணைத்துப் போட்டிருந்தனர் என்பது கவலைக்குரியதாக இருந்தது. அவர்களை இருளான வழியில் பாதையைக் கண்டறிய ஒரு விளக்கை மாத்திரமே ஏந்திச் செல்லும் ஒரு மனிதன், அந்தச் சுடரின் பக்கம் திரும்பி அதையும் அணைத்துப் போட்டதற்கு ஒப்பிடலாம். "உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (1:21) - ஆனால் அந்த இருளுக்கு அவர்களே பொறுப்பாளிகளாக இருந்தனர். எவ்வளவு பரிதாபகரமான நிலை!

புறஜாதியார் இவ்வளவு மதியீனமாக செயல்பட்டிருந்தது ஏன்? அவர்கள் சத்தியத்தை "அநியாயத்தினாலே" அடக்கிவைத்திருந்தனர் என்று பவுல் கூறினார் (வசனம் 18அ). இங்கு "அநீதி" என்பது பொதுவாகப் பாவத்தைக் குறிக்கிறது (1 யோவான் 5:17ஐக் காணவும்). உங்கள் வாழ்வில் பாவம் இருக்கும்போது, சத்தியம் உங்களை ஆறுதலற்றுப்போக, சங்கடம் அடைய, சந்தோஷம் அற்றுப்போகச் செய்யக்கூடும். விஷயம் அவ்வாறாக இருக்கும்போது, நீங்கள் பின்வரும் இருவிஷயங்களில் ஏதாவது ஒன்றைச் செய்யக்கூடும்: நீங்கள் உங்கள் பாவத்தை விட்டுவிடக்கூடும் - அல்லது நீங்கள் சத்தியத்தை விட்டுவிடக்கூடும். புறஜாதி உலகத்தாரில் பெரும்பான்மையானவர்கள் பிந்தியதைத் தேர்ந்துகொண்டிருந்தனர். இவ்விடத்தில் பவுல் நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதை மீண்டும் கவனியுங்கள்: "சத்தியத்தை ... அடக்கிவைக்கிற." இது கடந்தகாலத்தின் செயலாக மாத்திரம் இருந்ததில்லை; இது அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டிருந்த செயலாக இருந்தது.

### வழக்காடப்பட இயலாத முடிவு

இவ்விதமாகப் பவுல் தமது வழக்கை முன் வைத்தார். அவர் தமது எதிராளியை எதிர்கொள்வதை மீண்டும் ஒருமுறை நான் கற்பனை செய்கிறேன். அவர், "தேவனைப் பற்றியும் அவரது சித்தத்தைப் பற்றியும் அறிவதற்குப் புறஜாதியார் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் தேவன் தங்களுக்குக் கொடுத்திருந்த சத்தியத்தை அடக்கி வைத்தனர். அவர்கள் குற்றம்சாட்டப்பட்ட வகையில் குற்றவாளிகளாக இருந்தனர்!" என்று கூறுவதை நான் கேட்கிறேன்.

## *நிரூபணம்: மனப்பூர்வமான அறியாமை (1:20)*

### *கற்பனை செய்யப்பட்ட சொல்லாடல்*

*எதிராளி: "புறஜாதியாருக்குத் தேவன் விசேஷித்த சில வேளைகளில், இங்கும் அங்குமாகத் தம்மைக்குறித்து வெளிப்படுத்தி இருக்கலாம்; ஆனால் புறஜாதியாருக்கு தேவனுடைய வெளிப்படுத்துதல் அல்லது வெளிப் படுத்துதல்கள் என்ன என்பதை நாம் மிகச்சரியாக அறிய இயலாதபடியால், எங்குமுள்ள எல்லாப் புறஜாதியாரையும் ஆக்கினைத் தீர்ப்பிடுதல்/ கண்டனம் பண்ணுதல் என்பது நியாயமானதல்ல. புறஜாதியாரில் பெரும் பான்மையானவர்கள் நிச்சயமாகவே (கடமையைச் செய்யாதமைக்கு) மன்னிக்கப்பட முடியும்!"*

*பவுல்: "இல்லை, எல்லாருமே சாக்குப்போக்குக் கூற இயலாத நிலையில் உள்ளனர். அவர்களுக்குத் தரப்பட்ட வெளிப்படுத்துதல் எப்படிப் பட்டதாக இருப்பினும், இயற்கையில் தேவன் தம்மையே வெளிப்படுத்தி இருந்ததை அவர்கள் யாவரும் பெற்றிருந்தனர். அவர்களைச் சுற்றிலும் அவர் படைத்திருந்த ஒவ்வொரு பொருளும் உள்ளன. அவர்கள் சூரிய னையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் கண்ணோக்க முடியும். அவர்கள் சாக்குப்போக்குக் கூற இயலாதவர்களாக உள்ளனர் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.*

### ஒளியூட்டும் வசனப்பகுதி

*19ம் வசனத்தில் பவுல் தேவனைப் பற்றிய சில சத்தியங்கள் எல்லா ருக்கும் "விளங்கப்"பண்ணப்பட்டுள்ளன என்று இருமுறை கூறினார். இது உண்மையாக உள்ளது என்பதற்கு 20ம் வசனத்தில் காரணம் ஒன்றை அவர் கொடுத்தார்: "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்தியவல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்" (வசனம் 20அ).*

*தேவன் தம்மைப்பற்றி இரு "வெளிப்படுத்துதல்கள்" கொடுத்திருக் கிறார் என்று கூறப்பட்டுள்ளது: அவரது உலகத்தில் "இயற்கையான" வெளிப்பாடு மற்றும் அவரது வசனத்தில் "இயற்கைக்கு அப்பாற்பட்ட" வெளிப்பாடு. இவ்விரண்டு வெளிப்பாடுகளையும் பற்றித் தாவீது சங்கீதம் 19ல் பேசினார்: இந்த சங்கீதத்தின் முதல்பகுதியில் தாவீது, இயற்கையான வெளிப்பாட்டைப் பற்றி எழுதினார்: "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (வசனம் 1). இந்த சங்கீதத்தின் பிற்பகுதி, இயற் கைக்கு அப்பாற்பட்ட வெளிப்படுத்துதல்மீது மையங்கொண்டுள்ளது: "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" (வசனம் 7).*

*பவுல் லீஸ்திராவில் இருந்தபோது, அவர் தேவனுடைய இயற்கையான வெளிப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் தமது உரையைக்*

கேட்டவர்களுக்கு தேவனைப் பற்றிப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> "... வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் ... . சென்ற காலங்களில் ... அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" (நடபடிகள் 14:15ஆ-17).

நமது தற்போதைய வசனப்குதியில், பவுல் "உலகத்தில் உண்டாக்கப் பட்டிருப்பவை" மற்றும் "உலகம் உண்டானது" ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். இன்றைய நாட்களில், "கற்றறிந்த" மனிதர்கள் விசேஷித்த படைப்பு என்று ஒன்றுமில்லை, ஆனால் உலகில் உள்ள யாவும் பரிணா மத்தின் உற்பத்தியாகவே உள்ளது என்று வலியுறுத்துகின்றனர். கற்றறி வாளராக மாத்திரமின்றி ஏவுதல் பெற்றவராகவும் இருந்த பவுல், சிருஷ் டித்தல் என்பதை விசுவாசித்தார்; ஒவ்வொன்றும் படைக்கப்பட்டது என்று அவர் போதித்தார்.

தேவன் படைத்துள்ளவற்றைக் கண்ணோக்குதல் மூலமாகவே, நாம் அவரைப் பற்றிய - சகல விஷயங்களையும் அல்ல, ஆனால் - சில விஷயங் களை அறிந்துகொள்ள இயலும் என்று பவுல் வலியுறுத்தினார். உலகத்தைக் கண்ணோக்குதலின் மூலமாக அவர் (தேவன்) இருக்கிறார் என்ற முடிவுக்கு நாம் வரக்கூடும்/வர இயலும் என்று பவுல் குறிப்பிட்டிருக்க முடியும். இந்தக் கொள்கையானது ஒரு சிறு குழந்தையால்கூடப் புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு மிகவும் எளிமையானதாகும்: சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் சிருஷ்டிகர் ஒருவரைக் கொண்டுள்ளது. நாம் ஒரு கடிகாரம் பற்றிய விவரிப்பைப் பயன்படுத்தியிருக்கிறோம்: ஒரு கடிகாரம் இருக்கிறது என்பது அதைச் செய்தவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று அறிவிக்கிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் மாறுபட்ட விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார்: "எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்" (எபிரெயர் 3:4).

இருப்பினும், தேவன் இருக்கிறார் என்று நிரூபித்தல் (இவ்விடத்தில்) பவுலின் நோக்கமாக இருக்கவில்லை. மேலான ஒரு சக்தி உண்டு என்பதற்கு ஏறக்குறைய உலகளாவிய வகையில் ஒப்புதல் உள்ளது. மாறாக,தேவன் யார் என்பதையே பவுல் இங்கு வலியுறுத்தினார் - இதைப் பவுல் "காணப்படாத அவரது பண்புகள்" என்று அழைத்தார். கிரேக்க வசனத்தில், "காணப்படாத அவரது விஷயங்கள்" என்று மாத்திரம் உள்ளது. NIV வேதாகமம் இதை, "தேவனுடைய காணப்படாத குணங்கள்" என்று குறிப்பிடுகிறது.

"காணப்படாத அவருடைய ... என்பவைகள் ... தெளிவாய்க் காணப் படும்" என்ற வார்த்தைகளில், முரண்பாடு போலத் தோன்றும் ஒரு மெய் யுரை உள்ளது. "காணப்படும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kath-orao* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை ஒரு முன்னிடைச் சொல்லுடன்

(*kata*) இணைவு பெற்று "காண" (*horao*) என்று அர்த்தம் தருகிறது. புதிய ஏற்பாட்டில் *kathorao* என்பது, "உய்த்துணருதல், பகுத்தறிதல்"[15] - அதாவது கண்களால் காணுதல் மட்டுமல்ல, ஆனால் "சிந்தையில் உய்த்துணருதல், புரிந்துகொள்ளுதல்" என்று அர்த்தப்படுகிறது.[16]

தேவனுடைய படைப்பில் "காணப்"படக்கூடிய அவரது "காணப் படாத பண்புகள்" யாவை? பவுல் இரண்டைப் பெயர் கூறிக் குறிப்பிட்டார். முதலாவது அவரது "நித்திய வல்லமை [*dunamis*]." தேவன், "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று கூறியபோது "வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதியாகமம் 1:3) என்னும் அளவுக்கு அவர் வல்லமை நிறைந்தவராக இருக்கிறார். கர்த்தரிடத்தில் இருந்து புறப்பட்ட அந்தக் கூற்றினால் [மாத்திரம்] படைக்கப்பட்ட வல்லமையைக் கற்பனை செய்துபார்க்கத் தொடங்கவும் என்னால் முடிவதில்லை!

தேவனுடைய "தேவத்துவம்" என்பது அவரது படைப்பில் "காணப்" படக் கூடியதான அவரது இரண்டாவது பண்பாகும். "தேவத்துவம்" என்பது "தேவன்" என்பதற்கான (*theos* என்ற) வார்த்தையினின்று தரவழைக்கப் பட்ட *theiotes* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். *Theiotes* என்பது தெய்வீகத்தின் பண்புகளைக் குறிப்பிடுகிறது.[17] NCV வேதாகமம், *theiotes* என்பதை "அவரைத் தேவனாக்குகிற எல்லா விஷயங்களும்" என்று மொழிபெயர்க்கிறது.

தேவனுடைய தெய்வீக இயல்பை/தேவத்துவத்தை "உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே புரிந்துகொள்ள" முடியும் என்று பவுல் கூறினார். நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தை நாம் கண்ணோக்கும்போது, சிருஷ்டிகரின் பண்புகளை நாம் தெளிவாக உணருகிறோம். நிலையான இயற்கை விதிகளைக் கொண்டு இயங்குகிற உலகமானது, அதைத் தேவனே ஒழுங்குற அமைத்தார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. அவர் இயற்கையின் வட்டாரத்தில் ("ஈர்ப்பு விசையின் விதி" போன்ற) "விதிகளை"/"சட்டங்களை" கொண்டிருந்தால், ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய வட்டாரங்களிலும் அவர் விதிகளைக் கொண்டுள்ளார் என்று யூகிப்பது நியாயமானதே. இயற்கையின் "விதிகளை" நாம் மீறும்போது, கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன என்ற உண்மையானது, அவரது ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய சட்டங்களை நாம் புறக்கணித்தால் தண்டனைகள் காத்துள்ளன என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன. இந்தச் சிந்தனை வரிசை விரிவாக்கப்பட முடியும். தேவனுடைய அளிப்பின் ஏராளங்கள் தேவனுடைய சகலமும் நிறைவான தன்மைக்குச் சாட்சியளிக்கின்றன. இந்த உலகத்தில் உள்ள அழகு, தேவனுடைய பண்பின் அழகு பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது (சங்கீதம் 27:4ஐக் காணவும்) - இன்னும் பிற.

சிலர் ரோமர் 1:20 மற்றும் இது தொடர்பான வசனப்பகுதிகளைத் தவறாகப் பயன்படுத்தி, "இயற்கை இறையியல்" என்ற கோட்பாட்டை மேம்படுத்த முயற்சி செய்கின்றனர். தேவனைப் பற்றியும் அவரது சித்தத்தைப் பற்றியும் நாம் அறிய வேண்டிய யாவும் இயற்கையில் இருந்து கற்றறியப்பட முடியும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். இப்படிப்

பட்ட முடிவானது பவுலின் போதனையைத் தவறாகப் பயன்படுத்துவ தாகும். தேவனுடைய படைப்பை உற்றுநோக்குவதன்மூலம் படைத்தவர் பற்றிய எல்லா விஷயங்களையுமல்ல, ஆனால் சில விஷயங்களை நாம் அறிய முடியும் என்றே பவுல் கூறினார். ஆப்பிரிக்க நாட்டில் இருந்து வந்த ஒரு இளைஞர், தமது மனமாற்றம் பற்றிய வரலாற்றைப் பின்வருமாறு பகிர்ந்துகொண்டார்:

> நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, நைஜீரியாவின் புதர் மண்டிய காட்டுப்பகுதிக்குள் ஓடித்திரிந்து கொண்டிருந்தேன். தேவன் ஒருவர் இருக்கிறார் என்று அறிந்திருந்தேன். இரவு நேரங்களில் நான் மரங்களுக்கு இடையில் நின்றுகொண்டு வானத்தை உற்று நோக்குவது உண்டு. யாரோ ஒருவர் இந்த உலகத்தை உண்டாக்கினார் என்பதை அறிந்தேன், ஆனால் அவரை எப்படிக் கூப்பிட வேண்டும் என்று அறியாதிருந்தேன். ஒருநாள், எங்கள் கிராமத்திற்கு, ஒரு ஊழியக்காரர் வந்தார், அவர் சிறுபிள்ளைகளுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுப்பதற்காக வந்தார். அந்தப் பெண்மணி எங்களுக்கு வேதாகமத்தை வாசிக்கக் கற்பித்தார். பின்புதான் நான் மரங்கள் மற்றும் நட்சத்திரங்கள் மூலமாக தம்மை வெளிப்படுத்தியிருந்த தேவனுடைய பெயரைக் கண்டறிந்தேன்.[18]

இயற்கையில் இருந்து மட்டுமே தெய்வீக சத்தியங்கள் பல உணர்ந் தறியப்பட முடியாது.[19] "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை … தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) என்பது இவற்றில் மிக முக்கியமான, வியப்புக்குரிய சத்தியமாக உள்ளது. யாரோ ஒருவர், "இயற்கையில் நாம் தேவனுடைய கைவிரல் ரேகைகளைக் காணுகிறோம் … ஆனால் கிறிஸ்துவின் ஆணியடையாளங்களையே பாவிகளாகிய நாம் காண வேண்டியதாக உள்ளது" என்று கூறினார்.[20] பாவத்தைக் குறித்து உணர்வடையப் போதுமான அளவுக்கு ஒரு மனிதர் இயற்கையிலிருந்து கற்றறிய முடியும், ஆனால் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட போதுமான அளவுக்கு அவர் இயற்கையிலிருந்து கற்றறிய இயலாது.

அத்தேனே பட்டணத்தில் பவுல், "இயற்கையான வெளிப்படுத்துதல்" என்ற விவாதத்தைப் பயன்படுத்தியபோது, தேவன் "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினார்" என்பதைச் சுட்டிக் காண் பித்தார். இதை அவர் (தேவன்), மனிதர்கள் "தேவனைத் தேடுவதற்காக, அவருக்காக ஒருவேளை அவர்கள் தடவியாகிலும் கண்டறியத்தக்கதாக" அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக இவ்வாறு செய்தார் (நடபடிகள் 17:24, 27). இயற்கையின் மூலம் தேவனைப் பற்றி மனிதர்கள் அறியக்கூடிய விஷயங்கள், அவரைப் பற்றி இன்னும் அதிகம் அறிவதற்கான விருப்பத்தை அவர்களுக்குள் தூண்ட வேண்டும். அப்படிப்பட்ட விருப்பமானது அவர்களை நிறைவில், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப் படுத்துதலான வேதாகமத்தை நோக்கி வழிநடத்தும். தேவன், "தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறார்" என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார் (எபிரெயர் 11:6). இயேசு, "தேடுங்கள் அப்பொழுது

*கண்டடைவீர்கள்" என்றார் (மத்தேயு 7:7).*

*முற்பிதாக்களிடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட சத்தியத்தில் பெரும்பான்மையானவற்றைப் புறஜாதியார் தங்கள் நினைவில் இருந்து மறைய அனுமதித்து இருந்தனர். அவர்கள் எஞ்சியிருந்த சத்தியத்தையும் புரட்டிப் போட்டுச் சீர்குலைத்திருந்தனர். இருந்தபோதிலும், நதிகள் இன்னமும் பாய்ந்தோடின ... மலர்கள் இன்னமும் பூத்துக் குலுங்கின ... கதிரவன் இன்னமும் பிரகாசித்தான் ... புயல் மழைக்குப் பின்னர் இன்னமும் வானத்தில் வானவில் தோன்றியது ... மற்றும் இரவில் இன்னமும் விண்மீன்கள் பிரகாசித்தன. தேவன் அவர்களை (தம்மைக் குறித்த) சாட்சியங்களின்றி விட்டுவிடவில்லை. புறஜாதியார் ஆவிக்குரிய வகையில் கொஞ்சம் வெளிச்சத்தைக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் அந்த வெளிச்சத்தைப் புறக்கணித்திருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தின்படி வாழத் தவறியிருந்தனர்.*

*ஆகவே பவுல், "அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை" என்று முடித்தார் (ரோமர் 1:20ஆ). 2ம் அதிகாரத்தில் பவுல் யூதர்களைப் பற்றி இதே குற்றச்சாட்டை ஏற்படுத்தினார் (2:1). இது மனிதர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யாமலிருக்க தங்களின் "சாக்குப்போக்குகளை" கொண்டிருப்பதில்லை என்று அர்த்தமாவதில்லை. பணப்பை இல்லாத மனிதர் ஒருவரை நீங்கள் பார்க்க முடியும், ஆனால் சாக்குப்போக்கு இல்லாத மனிதர் ஒருவரைக்கூட உங்களால் காண முடியாது என்று கூறப்படுவது உண்டு. "அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை" என்று பவுல் கூறியபோது, எவரொருவரும் தேவனை அறியாதிருக்கவும் அவருக்குக் கீழ்ப்படியாதிருக்கவும் சரியான சாக்குப்போக்கு கொண்டிருப்பதில்லை என்றே அர்த்தப்படுத்தினார். NEB வேதாகமத்தில், "அவர்களின் நடக்கைக்குச் சாத்தியமான தற்பாதுகாப்பு எதுவும் இருப்பதில்லை" என்றுள்ளது.*

**வழக்காட இயலாத முடிவு**

*பவுல் புறஜாதியார் பக்கமாகத் தமது விரலைச் சுட்டிக்காண்பித்து, "தேவன் உங்களைப் புறக்கணித்திருக்கவில்லை. அவர் உங்களைக் குறித்து அக்கறை கொண்டு, நீங்கள் அவரைப் பற்றி அறியும்படிக்கு இந்த அற்புதமான உலகத்தை உங்களுக்குக் கொடுத்தார். ஆனால் அவருடைய வெளிப்படுத்துதலை நீங்கள் வேண்டுமென்றே புறக்கணித்தீர்கள். ஆகவே நீங்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லாமல் இருக்கிறீர்கள்" என்று கூறுவதை எனது கற்பனையில் என்னால் காண முடிகிறது. "சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை, சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை, சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை!" என்று அவர் திரும்பத் திரும்பக் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.*

# *நிரூபணம்: மேட்டிமையான துடுக்குத்தனம் (1:21, 22)*

**கற்பனை செய்யப்பட்ட சொல்லாடல்**

*எதிராளி: "நீங்கள் மிகவும் கடினமானவராக இருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன்! மனிதகுலத்தவர் தேவனை அறிந்துகொள்ளுதல் எப்போதும் சாத்தியமானதாக இருந்ததில்லை."*

*பவுல்: "மனிதர்கள் தேவனை அறிய முடியாதிருந்தனர் என்பதல்ல, ஆனால் அவர்கள் தேவனை அறிந்துகொள்ள விரும்பாதிருந்தனர் என்பதே பிரச்சனையாக இருந்தது. 'அவர்கள் தேவனை ஒப்புக்கொள்ளுதல் இனியும் தகுதியானது என்று காணாது இருந்தனர்'* [*ரோமர் 1:28*]*!"*

**ஒளியூட்டும் வசனப்பகுதி**

*நமது வசனப்பகுதி, "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும்" என்று தொடருகிறது (வசனம் 21அ, ஆ). புறஜாதியார் "தேவனை அறியாமலிருந்தனர்" என்று வேறொரு இடத்தில் (கலாத்தியர் 4:8; 1 கொரிந்தியர் 1:21; 1 தெசலோனிக்கேயர் 4:5ஐக் காணவும்) பவுல் வலியுறுத்தியிருப்பதால், "அவர்கள் தேவனை அறிந்தும்" என்ற சொற்றொடரின் மீது நான் விளக்கம் தர வேண்டியுள்ளது. இவ்விடத்தில் பவுல், கடந்தகாலத்தில் புறஜாதியார் தேவனை அறிந்திருந்தனர் என்று வலியுறுத்தினார். இருப்பினும், அவர்கள் தங்களுக்குத் தேவன் தந்த அறிவை அடக்கிவைத்து இருந்தபடியால் (ரோமர் 1:18), இப்போது அவர்கள் தேவனை அறியாதிருந்தனர்.*

*அவர்கள் அந்த நிலையை அடைந்தது எவ்வாறு? தேவனை விட்டுப் பிரிந்து கீழே செல்லும் பாதை பற்றிய விரிவானதொரு சித்தரிப்பைப் பவுல் தொடங்கினார். முதலாவதாக, புறஜாதியார் "அவரை மகிமைப்படுத்த" தவறியிருந்தனர் (வசனம் 21ஆ). "மகிமை" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை (doxazo) "மகிமை" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் (doxa) இருந்து வந்துள்ளது, இது "மகிமைப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது. மகிமை வாய்ந்த சூரிய அஸ்தமனங்களைக் கொண்ட உலகம் மகிமை வாய்ந்த தேவனால்தான் படைக்கப்பட்டிருக்க முடியும் என்பதை மக்கள் உணர்ந்திருக்க வேண்டும். மகத்துவமான மரங்கள் மற்றும் மலைகளைக் கொண்டுள்ள உலகம் மகத்துவமான தேவனால்தான் படைக் கப்பட்டிருக்க முடியும். திகைப்பூட்டும் அற்புதங்கள் பொதியப்பட்ட உலகம் வியப்புக்கும் ஆச்சரியத்திற்குமுரிய தேவனால்தான் வடிவமைக்கப் பட்டிருக்க முடியும். இருந்தபோதிலும், புறஜாதியார் தேவனுடைய தனித் தன்மை வாய்ந்த மகிமையை ஒப்புக்கொள்ள மறுத்தனர் என்று பவுல் கூறினார்.*

*இரண்டாவதாக,* [*அவர்கள்*] *"அவரை ஸ்தோத்திரியாமல்" இருந்தனர்*

(வசனம் 21இ). அவர்கள் தங்கள் இரத்தக்குழாய்களில் உயிரோட்டத்தை ஏற்றுக்கொண்டு, தேவன் அளிக்கும் காற்றைச் சுவாசித்தனர் (நடபடிகள் 17:25). அவர்கள், அவருடைய சூரிய வெளிச்சத்தில் குளிர்காய்ந்து அவர் தரும் மழையினால் பயன் அடைந்தனர் (மத்தேயு 5:45). அவர்கள், அவர் தரும் உணவை உண்டு நன்மையான காலங்களில் மகிழ்வடைந்தனர் (நடபடிகள் 14:17). அவர்கள் அவரிடமிருந்து இந்த மற்றும் பிற கொடைகளை மகிழ்வுடன் அனுபவித்தனர், ஆனால் அவர்கள், பரலோகத்தை நோக்கித் தங்கள் முகங்களை உயர்த்தி, "தேவனே, உமக்கு நன்றி!" என்று கூற நேரத்தை ஒருக்காலும் எடுத்துக் கொள்ளாது இருந்தனர்.

தேவனை மகிமைப்படுத்தத் தவறுகிற, மற்றும் அவரது அற்புதமான ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்தத் தவறுகிற ஒரு உலகத்தில் தான் நாம் இன்னமும் வாழ்கிறோம். ரோமர் 1:20 உலகத்தைப் பொதுவாகக் குற்றம்சாட்டுவதோடு, நம்மையும் குற்றம் சாட்டுகிறது. நாம் நமது ஆசீர்வாதங்களை எண்ணவும் தேவனுக்கு நமது நன்றியுணர்வை வெளிப்படுத்தவும் அடிக்கடி தவறுகிறோம். அவர், "நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிறார்" (1 தீமோத்தேயு 6:17; யாக்கோபு 1:17ஐக் காணவும்). நன்றியின்மை என்பது ஜீவனுள்ள தேவனிடத்திலிருந்து விலகிச் செல்லும் கீழ்நோக்கிய படிகளில் ஒன்றாகும் என்பதை நாம் மறவாமல் இருப்போமாக.

புறஜாதியாரின் உலகம் தேவனைப் புறக்கணித்துக் கொண்டிருந்தது. இதன் விளைவு என்னவாக இருந்தது? சமன்பாட்டில் இருந்து தேவன் எடுத்துப்போடப்பட்டபோது, இந்த உலகம் சரியாக அமையாதிருந்தது; இது கருத்தறிவு எதையும் ஏற்படுத்துவது இல்லை. காலங்காலமாகக் கேட்கப்படுகிற - "நாம் எங்கிருந்து வந்தோம்?"; "நாம் ஏன் இங்கிருக்கிறோம்?"; "நாம் எங்கு செல்லுகிறோம்?" என்ற - மாபெரும் கேள்விகள் பதில் அளிக்கப்படாமல் கடந்து விடுகின்றன. "நாம் தேவனைக் கைவிடும்போது, வேலை செய்வதற்கான நமது தர அளவை அல்லது குறிப்புக் கருத்தை நாம் இழந்துபோகிறோம்."[21]

புறஜாதியார் தேவனைப் புறக்கணித்தபோது, அவர்கள் "தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்;[22] உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (ரோமர் 1:21ஈ). கிரேக்க வசனத்தில் உள்ள இகழ்ச்சிக் குறிப்பைப் போதிய அளவு விளக்கப்படுத்துதல் கடினமானதாக உள்ளது. "வீணர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*mataios*) வார்த்தை "விளைவுகள் இல்லாத"[23] என்று அர்த்தப்படுகிறது. "சிந்தனைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*dialogismos* என்ற) வார்த்தை "வாதிடுதல்" என்று அர்த்தப்பட முடியும், ஆதலால் செயல்விளைவில் பவுல் அவர்களின் வாதிடுதல் காரணமற்றதாயிருந்தது என்று கூறினார். TEV வேதாகமம் அவர்கள் சிந்தனைகள் "முற்றிலும் மதியீனமாயிற்று" என்று கூறுகிறது.

"உணர்வில்லாத" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*asunetos* என்ற) வார்த்தை "பகுத்தறிவு இல்லாத," "புரிந்துகொள்ளுதல் அற்ற" என்று அர்த்தப்படுகிறது.[24] இவ்வார்த்தையை RSV வேதாகமம் "அறிவில்லாமல்" என்று மொழிபெயர்க்கையில், CEV வேதாகமத்தில் "மதியீனம்"

என்றுள்ளது. புறஜாதியார், தேவன் தங்களுக்குக் கொடுத்திருந்த சத்தியத்தைப் புறக்கணித்தபோது, அவர்களின் இருதயம் உணர்வில்லாமல், பகுத்தறிவு இல்லாமல், அறிவில்லாமல், மதியீனமானதாக போயிற்று. அவர்களின் இருதயங்களில் இருள் நிரம்பிற்று. அவர்கள் தங்கள் மதியீனமான எண்ணப்போக்கினால், தேவன் தங்களுக்குக் கொடுத்திருந்த வெளிச்சத்தை அணைத்துப் போட்டனர்.

அவர்களுடைய "இருதயம்" இருளடைந்தது என்பதைக் கவனியுங்கள். பகுத்தறியும் சிந்தனையின் விளைவாகத் தேவனை அவர்கள் புறக்கணித்தல் என்பது ஏற்பட்டுள்ளது என்று சிலர் உரிமைகோருகின்றனர்; ஆனால் அவிசுவாசம் இருதயத்தில் இருந்தே தொடங்குகிறது, அது சிந்தையில் இருந்து தொடங்குவதில்லை. அது பகுத்தறிவுச் சிந்தனையில் இருந்தல்ல, ஆனால் உணர்வுகளில் இருந்துதான் தோன்றுகிறது. மனிதர்கள் தேவனை விசுவாசிக்க விரும்புவதில்லை; இவ்விதமாக அவர்கள் அவரைப் புறக்கணிப்பதற்குத் தங்களின் "காரணங்களை" உபாயமாகக் கண்டறிகின்றனர்.

பவுலின் மனம்புண்படச் செய்யும் ஆராய்ச்சியானது 22ம் வசனத்தில் தனது உச்சக்காட்சியை அடைந்தது: "அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லியும், பயித்தியக்காரராகி." ரோமாபுரியிலும் மற்றும் இருந்த பிரதான நகரங்களிலும், சொற்பொழிவாளர்கள், கல்விமான்கள், தத்துவவாதிகள், நாட்டுப்பற்றாளர்கள்/அரசியல்வாதிகள், மற்றும் எழுத்தாளர்கள் நிறைந்திருந்தனர், இவர்கள் ஞானமாயிருப்பதாக "விளக்கப்படுத்தியதுடன்" கூடுதலாக, இவர்களின் "ஞானம்" உலகப்புகழ் பெற்றிருந்தது. இவர்கள் யாவரையும் பவுல், "பயித்தியக்காரர்கள்" என்ற ஒரே வார்த்தையைக் கொண்டு ஒதுக்கித்தள்ளினார்.

"பைத்தியக்காரர்" என்ற சொற்றொடர், கல்வி அல்லது மதிநுட்பம் என்பதற்குத் தொடர்பற்றதாக உள்ளது. மாறாக, அது இந்த உலகத்தைப் பற்றி, தேவன் தாமே தம்மைப் பற்றிக் கூறியுள்ள வெளிப்படுத்துதல் மற்றும் அவரது சித்தம் ஆகியவையின்றி விளக்கப்படுத்த முயற்சித்தலுடன் தொடர்புடையதாக உள்ளது. "பைத்தியக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*moros* என்பதன் பன்மை வடிவ) வார்த்தையில் இருந்தே, நாம் "morons" (முட்டாள்) என்ற வார்த்தையைப் பெறுகிறோம். பவுலின் கூற்றுப்படி, கற்றறிந்த தனிநபர் ஒருவர் தேவனுடைய வெளிப்படுத்துதலைப் புறக்கணித்து, தமது கருத்தைத் தைரியமாக வெளிப்படுத்தும்போது அவர் "கல்வியறிவு பெற்ற முட்டாளாக" இருக்கிறார். இதை காஃப்மேன் என்பவர் பின்வருமாறு எடுத்துரைத்தார்: ஒரு மனிதர் தேவனைப் புறக்கணிக்கும் போது, அம்மனிதர் "Homo sapiens" ("ஞானமுள்ள மனிதர்"[25]) என்றிருப்பதற்குப் பதிலாக "Homo ignoramus" ("அறியாமையுள்ள மனிதர்") என்பதாக உள்ளார்![26]

"அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராயினர்." பவுலின் வார்த்தைகள் அவரது காலத்திலிருந்த உலகத்தை மட்டுமல்ல, ஆனால் நமது நாட்களில் உள்ள உலகத்தையும் விவரித்தன. நாம் தேவனைத் தங்களது யூகங்கள் மற்றும் கோட்பாடுகளில் இனியும் உள்ளடக்காத தத்துவவாதிகள், அறிவியல் அறிஞர்கள், மற்றும் கல்வி

*யாளர்கள் ஆகியோரின் "ஞானத்தினால்" தாக்கப்படுகிறோம். தேவபக்தி யற்ற வாதம், நாத்திகவாத ஆத்திரப்பேச்சு, சடங்காச்சார மதக்கூட்டத்தின் குப்பை மற்றும் தொடர்பு சாதனங்களின் ஏளனப்பேச்சு ஆகியவற்றினால் துன்புற வேண்டியிருக்கிறது.[27] கிளென் பேஸ் என்பவர், "உயர்வாக ஒலிக்கும் மதியீனக்கருத்து"[28] என்று அழைத்த விஷயத்திற்குள் உலகம் மூழ்கிக் கொண்டிருக்கிறது.*

**வழக்காடப்பட இயலாத முடிவு**

*மேலே குறிப்பிடப்பட்ட வசனப்பகுதியைப் பவுல் தொகுத்துரைத்தலை நீங்கள் எவ்வாறு சித்தரிப்பீர்கள்? அவர் தமது கண்கள் ஒளிவீச, "மனிதனு டைய வழி அவனாலே ஆகிறதல்ல என்பதையும், தன் நடைகளை நடத்துகிறது நடக்கிறவனாலே ஆகிறதல்ல என்பதையும் மனிதர்கள் எப்போதுதான் கற்றுக்கொள்வார்களோ [எரேமியா 10:23]? தேவனற்ற மனித ஞானம் பைத்தியமாக உள்ளது - அது புரிந்துகொள்ளுதலற்ற, அறியாமையின் குட்டையே தவிர வேறெதுவும் அல்ல!" என்று கூறுவதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன்.*

## *நிரூபணம்: அவத்தமாக்கும் விக்கிரகாராதனை (1:23, 25)*

**கற்பனை செய்யப்பட்ட சொல்லாடல்**

*எதிராளி: "பைத்தியகாரத்தனம்? புரிந்துகொள்ளுதல் அற்றநிலை? அறியாமையின் குட்டை? நீங்கள் உங்கள் நிலை பற்றி மிதமிஞ்சி கூறு கிறீர்கள் என்பது நிச்சயம்!"*

*பவுல்: "எப்படியும் நான் குறைவாகவே கூறியுள்ளேன். மனிதகுலம் எவ்வளவு மதியீனமாகிற்று என்பதற்கு ஒரு விவரிப்பைப் பெற நீங்கள் விரும்புகிறீர்களா? இதோ ஒரு உதாரணம்: மனிதர்கள், மரம், கல், களிமண், மற்றும் உலோகம் ஆகியவற்றினால் சொரூபங்களை உருவாக்கி - தாங்கள் உண்டாக்கினவற்றை விழுந்து வணங்குகிறார்கள்!"*

**ஒளியூட்டும் வசனப்பகுதி**

*"தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராகி" (வசனம் 22) என்ற வார்த்தைகள் தொடக்கக் கூற்றாக மாத்திரமே இருந்தன. அவர்கள் எவ்வளவுக்குப் பைத்தியக்காரர்கள் ஆகியிருந்தனர் என்பதற்கான ஆதாரத்தைக் கொண்டு இந்த வாக்கியத்தைப் பவுல் தொடர்ந்தார்: "அழி வில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" (வசனம் 23).*

*ஆராதனை செய்ய வேண்டியதன் அவசியத்தைத் தேவன் மனிதர் களுக்குள் நிலைநாட்டி இருந்தார். ஒருவர் உலகில் எங்கு சென்றாலும், உயர்வான வல்லமையொன்றை ஆராதிக்க வேண்டிய உலகளாவிய முக்கியவத்துவத்திற்கு/வற்புறுத்துதலுக்கு ஆதாரத்தைக் காண்பார். மனித*

குலம் முழுவதும் மெய்யான தேவனைப் புறக்கணித்தபோது, ஆராதிப்பதற்கான விருப்பம் இன்னமும் மனிதர்களின் இருதயங்களில் பற்றி எரிந்தது. இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, அவர்கள் பொய்யான தேவர்களைக் கண்டறிந்து, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக சொரூபங்களை உண்டாக்கி, பின்பு அந்த சொரூபங்களை விழுந்து வணங்கினர்.

யூதர்களேகூட தேவனுடனான தங்கள் உடன்படிக்கையின் தொடக்க காலத்திலிருந்தே விக்கிரகாராதனையுடன் போராடியிருந்தனர் (யாத்திராகமம் 32), இப்போராட்டம் பிளவுபட்ட ராஜ்யங்களின் காலம் வரையிலும் தொடர்ந்திருந்தது (1 இராஜாக்கள் 12). ரோமர் 1:23ல் உள்ள மொழிநடைக்கு ஒப்பானதொன்றை சங்கீதக்காரர் பயன்படுத்தி, "தங்களின் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்" என்று எழுதினார் (சங்கீதம் 106:20).


வேதாகமத்தில் விக்கிரகாராதனைக்கு எதிரான மிகக்கடுமையான தாக்குதல்களில் ஒன்று, எரேமியா 10ம் அதிகாரத்தில் உள்ளது. விக்கிரகாராதனை செய்கிற யாவரும் "மிருக குணமும் மதியீனமுமுள்ளவர்கள்" மற்றும் "அறிவில்லாதவர்கள்" என்று தீர்க்கதரிசி அறிவித்தார் (வசனங்கள் 8, 14அ). விக்கிரகங்கள் செய்ய, "காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிற வாச்சியால் பணிப்படும்" என்று அவர் கூறினார் (வசனம் 3). மேலும் அவர், "வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள்" என்றும் குறிப்பிட்டார் (வசனம் 4). அவர் இந்த விக்கிரகங்களை, "அவைகள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள்" என்று ஒப்பிட்டார் (வசனம் 5அ). விக்கிரகங்கள் "நடக்கமாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும்" (வசனம் 5ஆ). மேலும் அவர் "தட்டார் அனைவரும் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் ஆவி இல்லை" என்றும் எழுதினார் (வசனம் 14ஆ).

மனிதர்கள் தேவனுடைய மகிமையைத் தங்களின் சுரூபங்களுக்கு "மாற்றியிருந்தனர்" (*allasso*) (ரோமர் 1:23ஆ). NCV வேதாகமத்தில், "அவர்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதற்காக தேவனுடைய மகிமையை விற்றுப்போட்டிருந்தனர்" என்றுள்ளது. தம்மிடம் உள்ளவற்றின் மதிப்பை அறியாதிருக்கும் ஒருவர், அதைக் காட்டிலும் குறைவான மதிப்புகள் ஒன்றிற்குப் பதில் அதை விற்றுப் போடுவதற்கு மனவிருப்பமாக இருக்கிறார். உதாரணமாக, ஒரு குழந்தை பளிச்சென்று தெரியும் பகட்டுப் பொருள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, தன்னிடம் உள்ள விலை உயர்ந்த நகையைக் கொடுத்துவிடக் கூடும். எனது வாழ்வில் நான் சில மோசமான பரிவர்த்தனைகளைச் செய்திருக்கிறேன், ஒரு வேளை நீங்களும்கூட அவ்வாறே செய்திருக்கலாம். புறஜாதியார் எல்லாவற்றிலும் மிகமோசமான பரிவர்த்தனையைச் செய்திருந்தனர்: அவர்கள் பொய்களுக்குப் பதிலாகத் தேவனுடைய சத்தியத்தைப் பரிவர்த்தனை செய்திருந்தனர். செயல் விளைவில் அவர்கள் பொய்யான, அழியக்கூடிய, மதிப்பில்லாத

சுரூபங் களைக் கொள்முதல் செய்ய, மெய்யான, அழிவில்லாத மகிமையுள்ள தேவனை விற்றுப்போட்டிருந்தனர்.

அவர்கள் தேவனைப் புறக்கணித்தபோது அவர்களின் மனங்கள் இருளடைந்திருந்தன என்பதைச் சிந்தையில் காத்துக்கொள்ளுங்கள். இருளுக்குள் எட்டிப்பார்க்கும் இளம்பிள்ளை, வினோதமான பயங்கரமான எல்லா உருவங்களையும் கற்பனை செய்துகொள்கிறது. மனிதர்கள் இருள் நிறைந்த மனங்களிலும் சர்வவல்லவரைக் கண்ணோக்க முயற்சி செய்த போது விஷயம் மேற்கூறியது போன்றே இருந்தது. அவர்கள், "அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள் ஊரும் பிராணிகள்" ஆகியவற்றின் ரூபங்களில் தங்கள் கடவுள்களை ஏற்படுத்திக் கொண்டனர் (வசனம் 23அ). பவுலின் கூற்றிற்கான உதாரணங்கள் எல்லாருக்கும் ஏற்புடையவையாக இருந்தன:

- "மனிதன்": ரோமர்கள் இராயனை வழிபட்டனர்; கிரேக்கர்கள் தங்கள் கடவுளர்களில் பலரை மனித வடிவில் கண்ணோக்கினர்.
- "பறவைகள்": எகிப்தியர்கள், நாரை உட்படப் பல்வேறு வகையான பறவைகளை வழிபட்டிருந்தனர்.
- "மிருகங்கள்": எகிப்தியர்கள் காளை மாட்டை வழிபட்டனர்; யூதர்கள் தங்கள் பொன் கன்றுக்குட்டிகளுக்கு முன்பாகப் பணிந்து கொண்டிருந்தனர்.
- "ஊரும்பிராணிகள்": அசீரியர்கள் பாம்பு போன்ற ஊரும் பிராணிகளை வழிபட்டிருந்தனர்; எகிப்தியர்கள் வண்டை வழிபட்டிருந்தனர்.



பாதை எப்பொழுதும் கீழ்நோக்கியதாகவே இருந்தது. செஸ்டர் க்விம்பி என்பவர், "அவர்கள் இரண்டு கால்களுடையவற்றிற்கு இறங்கினர், பின்பு நான்கு கால்களை உடையவற்றிற்குக் கீழே இறங்கினர், அதன்பின்பு வயிற்றினால் நகருபவற்றிற்கு கீழே இறங்கினர்" என்று எழுதினர்![29] அவர்கள் மூட்டைப்பூச்சிகளை (க்கூட) வழிபடுவதில் முடிவடையும்படிக்கு அவர்களின் இருதயங்கள் அவ்வளவாக இருளடைந்திருந்தன!

25ம் வசனத்தில் பவுல் "மாற்றினர்" என்ற வார்த்தையை மறுபடியும் பயன்படுத்தினார்: "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி [*metallasso*]" (வசனம் 25அ). NEB வேதாகமம், "அவர்கள்

மெய்யான தேவனைப் பண்டமாற்றுச் செய்தனர்" என்று கூறுகிறது. NASB வேதாகமம், அவர்கள் தேவனை "ஒரு பொல்லாங்கு" வர்த்தகம் செய்தனர் என்று கூறுகிறது, ஆனால் "பொய்" ["the lie"] என்பதே கிரேக்க வசனத்தின் நேரடியான மொழிபெயர்ப்பாக இருக்கும். பவுலைப் பொறுத்தமட்டில், தேவனுடைய வெளிப்படுத்துதல்களைப் புறக்கணித்ததால் விளைந்த விக்கிரகாராதனை "the lie" அதாவது "பொய்"யாக இருந்தது. மக்கள் இந்தப் பொய்யை ஏற்றுக்கொண்டபோது அவர்கள், "சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்" (வசனம் 25ஆ). படைத்தவருக்கு மேலாக படைக்கப்பட்டவற்றை அவர்கள் உயர்த்தினர்.

விக்கிரகாராதனையின் மீது பவுல் கூறும் கண்டனங்களை நாம் வாசிக்கையில், குறிப்பிட்ட சில அபாயங்களை நாம் தவிர்த்தாக வேண்டும். நாம் நமது சிந்தனைகளை முதல் நூற்றாண்டோடு சுருக்கிக் கொள்ளுதல் என்பது ஒரு அபாயமாக உள்ளது. சொரூபங்களை வழிபடுதல் இன்னமும் பொதுவான வழக்கமாக உள்ளது. சிலநாடுகளில் இப்பழக்கம் மற்ற நாடுகளைவிட அதிகம் தெளிவானதாக இருக்கிறது, ஆனால் இது எல்லா இடங்களிலும் நிலவுகிறது. சிலர் கற்புலனாகாததை நினைத்துப்பார்த்தல் கடினமாயிருக்கிறதென்று காணுகின்றனர்; அவர்கள் தங்களால் காணக் கூடிய கடவுளை அல்லது கடவுள்களைத் தேர்ந்துகொள்கின்றனர். காணப்பட இயலாத தேவனை ஆராதிப்பதற்குப் பலத்த மற்றும் உறுதி யான விசுவாசம் தேவை. புதிய ஏற்பாடு, "நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக" என்று இன்னமும் போதிக்கிறது (1 யோவான் 5:21).

பொய்யான கடவுள்களுக்காக உண்மையான தேவனைப் புறக்கணிப் பதில், நாம் நமது சிந்தனைகளை உருவ வழிபாட்டுடன் சுருக்கிக் கொள்வோம் என்பது இன்னொரு அபாயமாக உள்ளது.

> யாரோ ஒருவர், "உங்கள் கை பற்றிக்கொள்வது மற்றும் சார்ந்திருப்பது எதுவோ, அதுவே உங்கள் கடவுளாகிறது" என்று கூறியிருக்கிறார். உங்கள் வாழ்வில் நீங்கள் *முதலிடத்தில்* வைக்கும் விஷயம் எதுவோ, அதுவே உங்கள் கடவுளாகிறது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட பெரும்பறவைகள் அல்லது கல்லால் ஆன கண்களைக் கொண்ட மர விக்கிரகங்கள் ஆகியவற்றை நாம் தொழுதுகொள்ளாதிருக்கலாம், ஆனால் நாம் அப்பொழுதும் யெகோவாவிற்குப் போட்டியாக வேறே தெய்வங்களைக் கொண்டிருக்க சாத்தியக்கூறு உள்ளது. நாம் ஒரு பொன் கன்றுக்குட்டியை ஆராதிக்காமல் இருக்கலாம், ஆனால் அப்போதும் நாம் பொன்னை ஆராதிப்பவர்களாயிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. பாகாலின் விக்கிரகத்துக்கு முன்பாக நாம் முழங்காற்படியிடாமல் இருக்கலாம், ஆனால் நமது பணத்தின்மீதும் செதுக்கப்பட்ட விக்கிரக உருவம் உள்ளதே. நம்மில் எவராவது, நாம் பெருவிருப்பம், மாயை அல்லது சுயத்தைத் தேவனை ஆராதிப்பதற்கு மேலாக ஒருக்காலும் வைத்ததில்லை என்று கூற முடியுமா? வாழ்வில் பல விஷயங்கள் நல்லவைகளாக உள்ளன, ஆனால் அவைகள்

*தேவனாவதில்லை.*[30]

*பலர் தேவனுடைய சித்தம் என்ன என்று கேட்டு அவரைப் பிரியப் படுத்துவதற்குப் பிரயாசப்படாமல் தங்களைத் தாங்களே சேவித்துக் கொண்டு தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றப் பாடுபடுதல் என்பது அவர்கள் "சிருஷ்டிகரைத் தொழுதுசேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவிக்கும்" பொதுவான வகையாக உள்ளது. பலர் சுயத்தை உயர்த்தி தேவனைத் தாழ்த்துகின்றனர். "தேவன் சிறியவர், நாம் பெரியவர்கள்" என்பது அவர்களின் எண்ணப்போக்காக உள்ளது. [தமிழில் இதை, "கடவுளை மற, மனிதனை நினை" என்று கூறுதல் பொதுவான வழக்கமாக உள்ளது.]*

*மனிதகுலம் தேவனை எவ்வளவாகப் புறக்கணித்து, அவரை மகிமைப் படுத்தத் தவறி இருந்தது என்பதைப் பவுல் ஆழ்ந்து சிந்திக்கையில், அவரால் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாது போனது. அவர் பின்வரும் வார்த்தைகளுடன் 25ம் வசனத்தை முடித்தார். "அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ஆமென்." இதில் "ஸ்தோத்திரிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* (*eulogetos*) *வார்த்தையானது,* "eulogy" (*"ஒரு நல்ல வார்த்தை") என்ற சொல்லை நாம் பெறுகிற மூல வார்த்தையுடன் தொடர்புடையதாக உள்ளது. இது "துதிக்குப்பாத்திரர்" என்று அர்த்தப் படுகிறது.*[31] *புதிய ஏற்பாட்டில் இது தேவனுக்கு மாத்திரம் பயன்படுத்தப் பட்டுள்ளது. பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "அவர் ஒருவர் மாத்திரமே என்றென்றும் ஆராதிக்கப்படத் தகுதியானவர், ஆமென்" என்றுள்ளது.*

### வழக்காடப்பட இயலாத முடிவு

*அடுத்த இரு பாடங்களில், நாம் புறஜாதியாரின் உலகம் பற்றிப் பவுலின் பேரழிவுக்குட்படுத்தும் மதிப்பீட்டைத் தொடர்ந்து காண்போம். இருப் பினும் இப்பாடத்தில் விளக்கியுரைத்து முடிக்கப்பட்டுள்ள இருவசனங் களும், பவுல் தமது குற்றச்சாட்டை உறுதிப்படுத்திக் காண்பித்தார் என்று நம்மை இணங்கச் செய்ய வேண்டும். விக்கிரகாராதனை என்ற வெட்கக் கேடான நடைமுறையைப் பற்றிப் பேசி, பின்பு "குற்றம் சாட்டப்பட்ட வகையில் குற்றவாளிகளே!" என்று முடிக்கிறபோது பவுல் எனது சிந்தையில் உயர்ந்து நிற்கிறார்.*

## முடிவுரை

*சிக்காகோ நகரத்தில் வெயில் காயும் ஒருநாளில், கடுமையான முகம் கொண்ட மனிதர் ஒருவர், போக்குவரத்தினால் நெரிசல் மிகுந்த சாலையின் குறுக்கு சந்திப்பில் நின்றுகொண்டிருந்தார். பாதசாரிகள் அவசரமாய் அவரைக் கடந்து செல்லும்போது, அம்மனிதர், ஒவ்வொருவரையும் சுட்டிக் காண்பித்து, "குற்றவாளி!" என்று கூறிக் கொண்டிருந்தார். முறைத்துப் பார்ப்பதற்காகப் பலர் நின்றனர். பின்னர் அவர்கள் தங்கள் கண்களைத் தாழ்த்தி, விரைவாகச் சென்றனர். ஒரு மனிதர் தனது கூட்டாளியிடம்,*

*"இவர் எப்படி இதை அறிந்தார்?" என்று வினவுவது கேட்கப்பட்டது.*[32]

*நீங்களும் நானும் கடுமையான முகத்தையும் சுட்டிக்காட்டும் விரலையும் எதிர்கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால் ரோமர் 1:18-25ஐ நாம் படிக்கையில், நமக்கு நாமே நேர்மையானவர்களாயிருந்தால், நாமும்கூடக் குற்றவாளிகளாயிருக்கிறோம் என்றே முடிவு செய்திருப்போம். தேவன் நமக்கு அருளியுள்ள சத்தியத்திற்கு நாம் எப்போதும் கீழ்ப்படிபவர்களாக இருந்த தில்லை. நாம் சில வேளைகளில் தேவனை நமது சிந்தனைகளில் இருந்தும் நமது வாழ்வில் இருந்தும் புறம்பே வைத்திருக்கிறோம். நாம் நம்மைப் படைத்தவருக்கு முன்னதாக நமது சுயத்தை வைத்திருக்கிறோம். நாமும்கூட "குற்றம் சாட்டப்பட்ட வகையில் குற்றவாளிகளாக இருக்கிறோம்!"*

*"மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோத மாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர் 1:18ஆ, இ) என்பது பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்றே இன்னும் உண்மையாகவே உள்ளது. "ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31) என்பதும் இன்னமும் உண்மையாகவே உள்ளது. தேவனுடைய கிருபை உங்களுக்குத் தேவை என்பதை நீங்கள் உணர்ந்தறிந்தால், அன்பும், நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் கொண்ட விசுவாசத்தில் இன்றே அவரிடம் திரும்பும்படி நான் உங்களை வேண்டுகிறேன் (நடபடிகள் 2:36-38)!*

## *பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் ஒரு குறிப்பு*

*"முதலாவது, மோசமான செய்தி" என்பது இந்தப் பாடத்திற்குச் சாத்தியமான இன்னொரு தலைப்பாக இருக்கலாம்.*[33] *ரோமர் 1:18-25ல் உள்ள பின்வரும் இரு வசனப்பகுதிகள், தலைப்புப் பாடங்களுக்கான வசனப்பகுதிகளாகப் பயன்படக்கூடும்: "சத்தியத்தை அடக்கி வைக்கிறவர்கள்" (வசனம் 18) மற்றும் "தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றுபவர்கள்" (வசனம் 25).*

*குறிப்புகள்*

[1]John R. W. Stott, *The Message of Romans*: *God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 69. [2]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 518. [3]*நாம் காணப்போகிறபடி, சாத்தியமான மறுப்புகளைப் பவுல் அடிக்கடி எதிர்நோக்கினார்.* [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 651. [5]Ibid., 653. [6]*பாவத்திற்கு எதிரான "நீதியுள்ள கோபம்" போன்ற விஷயம் உள்ளது, ஆனால் நமது கோபத்தில் பெரும்பான்மையானது சுயத்தையே மையம் கொண்டுள்ளது.* [7]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 582. [8]Dave Miller, "The Meaning of Ro-

mans" (3), sermon presented on the *Truth in Love* television program, Fort Worth, Texas, 16 January 2002. [9]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 76. [10]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans*, The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 40.

[11]Stott, 72. [12]*"தேவனே அதை வெளிப்படுத்தினார்" என்பதைக் கவனியுங்கள். இயற்கையை உற்று நோக்கியதன்மூலம் மனிதன் தேவனை "கண்டுபிடித்தான்" ("இயற்கையின் வேதசாஸ்திரம்" கற்பிப்பதுபோல) என்பதன்மீதல்ல, ஆனால் தேவனே தம்மை வெளிப்படுத்தினார் என்பதன்மீதே பவுலின் வலியுறுத்தம் உள்ளது.* [13]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 32-38. [14]Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul*, vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 23. *புறஜாதியார் சத்தியத்தை "பற்றி"யிருப்பினும் அவர்கள் சத்தியத்தின்படி வாழவில்லை, இவ்வித மாக அவர்கள் சீர்பொருத்தமற்றவர்களாயிருந்தனர் என்று பவுல் கூறியதாகச் சிலர் நம்புகின்றனர். இருப்பினும், இவ்விடத்தின் சந்தர்ப்பப்பொருளில், சீர்பொருத்தம் இல்லாமை என்பதன்மீது அல்ல, அதற்குப்பதிலாக அறியாமை (மனப்பூர்வமான அறியாமை) என்பதன்மீதே வலியுறுத்தம் உள்ளது.* [15]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 208. [16]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 82. [17]Vine, 178-79. *Theiotes என்பது theotes என்பதிலிருந்து வித்தியாசப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது (இது கொலோசெயர் 2:9ல் காணப்படுகிறது).* KJV *வேதாகமத்தில் ரோமர் 1 மற்றும் கொலோசெயர் 2 பகுதிகள் இவ்விரண்டையுமே* "Godhead" *("தேவத்துவம்") என்று மொழிபெயர்க்கின்றன; ஆனால் முதல் வார்த்தை தெய்வீகத்தின் பண்புகளைக் குறிப்பிடுகையில் இரண்டாவது வார்த்தை தெய்வீகத்தின் சாராம்சத்தைக் குறிக்கிறது.* "Godhead" *என்பது* "God-hood" *என்று அர்த்தப்படும் பழைய ஆங்கில வார்த்தை ஒன்றிலிருந்து வந்துள்ளது.* [18]Adapted from Bill Bruster, in *Illustrating Paul's Letters to the Romans*, comp. James F. Hightower (Nashville: Broadman Press, 1984), 20. [19]*ஜிம் மெக்கைகன் என்பவர், ஒரு தெய்வக்கொள்கையை இயற்கையிலிருந்து மட்டும் நம்மால் நிரூபிக்கக்கூட இயலாது என்று சுட்டிக் காண்பித்தார்.* (Jim McGuiggan, *The Book of Romans*, Looking Into The Bible Series [Lubbock, Tex.: Montex Publishing Co., 1982], 76-77.) *ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கிறார். ஆனால் இவ்விடத்தில் பவுல் வேறொரு விஷயம் பற்றிக் கலந்துரையாடினார்.* [20]Quoted in Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 14.

[21]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 28. [22]*தோற்றகாலப் பொருளில் "வெறுமையான" அல்லது "பயனற்ற" என்று அர்த்தப்படுகிற* "vain" *என்ற வார்த்தையை* KJV *வேதாகமம் கொண்டுள்ளது.* NKJV *வேதாகமம்* "futile in their thoughts" *என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளது.* [23]Vine, 657. [24]Ibid., 246. [25]*லத்தீன்மொழியில் homo என்பது "மனிதன்" என்றும், sapiens என்பது "ஞானம்" என்றும் அர்த்தப்படுகிறது.* [26]Coffman, 41. [27]*நீங்கள் இந்தப்பாடத்தைப் பயன்படுத்தும்போது, நீங்கள் வாழும் பகுதியின் சூழ்நிலைக்கேற்றவகையில் உங்கள் விளக்கங்களைத் தழுவியமைத்துக் கொள்ளவும். நீங்கள் உதாரணங்கள் கொடுக்க விரும்பலாம்.* [28]Glen Pace, sermon preached at Judsonia church of Christ, Judsonia, Arkansas, 5 January 2003. [29]Chester Warren Quimby, *The Great Redemption* (New York: Macmillan Co., 1950), 45-46. [30]Adapted from David Roper, *"The Day Christ Came (Again)" and Other Sermons* (Dallas: Christian Publishing Co., n.d.), 64-65.

[31]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 305. [32]Adapted from Alton H. McEachern, in *Illustrating Paul's Letters to the Romans*, comp. James F. Hightower (Nashville: Broadman Press, 1984), 20-21. [33]Briscoe, 38.